**05.09.2020**

# <u>சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் வரும் 07–09–2020 அன்று துவங்கப்படவுள்ள நிலையில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் சைதாப்பேட்டை மற்றும் ஆலந்தூர் மெட்ரோ நிலையங்களில் ஆய்வு</u>

## மாண்புமிகு அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த தகவல்கள்

வரும் **07–09–2020** அன்று நாடு முழுவதும் மெட்ரோ இரயில் சேவைகள் துவங்கப்படவுள்ள நிலையில் இதுகுறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் வெளியிட்டுள்ளது. **22–03–2020** முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மெட்ரோ இரயில் சேவைகளை மீண்டும் இயக்கும் போது, மெட்ரோ இரயில் நிறுவனங்கள் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், பயணிகள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், இரயில் பெட்டிகள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் தூய்மை மற்றும் பராமரிப்பு, தொடுதல் இல்லா பயணச்சீட்டு வழங்கும் முறை, கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் முறை, குளிர்பதன வசதிகளின் மேலாண்மை, இணைப்பு போக்குவரத்து வசதிகளைக் கையாளுதல், கொரோனா தொற்றுடன் மெட்ரோ நிலையங்களுக்கு வருபவர்களைக் கையாளுதல் போன்ற விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் **03–09–2020** அன்று வெளியிட்ட பத்திரிக்கைச் செய்தியில், மெட்ரோ இரயில் சேவைகள் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இயக்கப்படும் என்று அறிவித்திருந்தது. **பொதுமக்கள் மற்றும் குறிப்பாக மெட்ரோ இரயில் பயணிகளின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, மெட்ரோ இரயில் சேவைகள் 07.09.2020 முதல் காலை 8 மணிக்கு பதிலாக காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை இயக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இதனால் வெளியூர் பேருந்து, இரயில் மற்றும் விமானப் பயணிகள் பெரிதும் பயனடைவார்கள்.

சென்னை மெட்ரோ இரயில் பயணத்தால் கொரோனா பெருந்தொற்று பரவாமல் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நான் அறிவுரை வழங்கியுள்ளேன். இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எடுத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எனக்கு திருப்தி அளிப்பதாக உள்ளது.

குளிர்சாதனம் மற்றும் காற்றுப்போக்கியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகளின்படி சென்னை மெட்ரோ இரயிலின் சுரங்கப்பாதை மெட்ரோ நிலையங்களின் வெப்பநிலை பராமரிக்கப்படுகின்றது. மேலும் சுத்தமான காற்று, மெட்ரோ நிலையங்களுக்குள், மத்திய அரசு நிர்ணயித்துள்ள அளவினை விட நான்கு மடங்கு உட்புகும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரயில் பெட்டிகளைப் பொருத்தவரையில் வெப்ப அளவு 24 டிகிரி முதல் 30 டிகிரி அளவிலும், சுத்தமான காற்று நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டும் இயக்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் பயணச் சீட்டை எதையும் தொடாமலேயே பெறுவதற்கும், மெட்ரோ இரயில் நிலையத்திற்குள் நுழைவதற்கும், வெளியே செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதனால் கொரோனா தொற்று பரவுவதற்கு வாய்ப்புகள் மிகமிகக் குறைவாக உள்ளது. பணமில்லா பரிவர்த்தனை மூலம் மிடுக்கு பயண அட்டைகள் (Smart Card) பெறுதல் மற்றும் மதிப்பூட்டுதல். க்யூ,ஆர் குறியீட்டு முறையில் சென்னை மெட்ரோ இரயில் செயலியில் பயணச்சீட்டு பெறுதல் மற்றும் அவற்றை மெட்ரோ நிலையங்களில் பயன்படுத்துதல் ஆகிய புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கு கூட்டமாக நிற்பதைத் தவிர்ப்பதற்காக பயண அட்டை சான்று அளிக்கும் இயந்திரம் (Travel Card

Reader), பயணிகள் கவுண்டர் மற்றும் பயண அட்டை வழங்கும் இயந்திரத்தின் முன்பும் வைக்கப்படவுள்ளது. இந்த இயந்திரத்தில் மிடுக்கு அட்டையில் உள்ள தொகை, எஞ்சியுள்ள பயணங்கள், மதிப்பூட்டுதல் மற்றும் பயண வரலாறு ஆகிய விவரங்களை பார்ப்பதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் பெருந்தொற்றை தடுக்க பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும் பல்வேறு பணிகளுக்கு அதற்கான வரைமுறைகளுடன் அனுமதி அளித்து வருகின்றது. **30–09–2020** வரை அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காலத்திலும், நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, பொதுப் போக்குவரத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன்படி **07–09–2020** முதல் மெட்ரோ இரயில் பயணிகள் சேவைகள் துவக்கப்படவுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வழங்கிவரும் அறிவுரைகளின்படி, மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு பயணிகள் வரும்போது தவறாமல் முகக்கவசம் அணிந்து வரவேண்டும். இங்கு மெட்ரோ இரயில் நிறுவனத்தால் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள கை சுத்திகரிப்பான் மூலம் கைகளைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். உயர் வெப்பநிலை பரிசோதனையை மேற்கொண்டும் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து வரிசையாக மெட்ரோ நிலையங்களுக்குள் நுழைய வேண்டும். தற்போது நேரடி தொடர்புகளை தவிர்க்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பல்வேறு தொடுதல் இல்லா பயணச்சீட்டு வழங்கும் முறையைப் பயன்படுத்தி பயணம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மெட்ரோ இரயில் நிலையங்களில் கொரோனா பெருந்தொற்று ஏற்படாவண்ணம் பல்வேறு நடவடிக்கைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

எடுத்திருந்தாலும், தொற்றுப் பரவலைத் தடுக்க பயணிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை அனைவரும் அறிவீர்கள்.

இந்தப் பெருந்தொற்று காலத்திலும் பயணிகளுக்கு மிகப் பெரிய அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ள சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், இயக்குநர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) மற்றும் இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு இந்தத் தருணத்தில் எனது நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்